முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!!

தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த**

**மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்**

**சுபகிருது வருடம் மாசி மாதம் 21 திகதி முதல்**

**சுபகிருது வருடம் மாசி மாதம் 28 திகதி வரை**

**(05.03.2023 ஞாயிறு முதல் 12.03.2023 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. தவபலம் கொண்ட பாரதமே
   தருமபலம் கொண்ட தமிழகமே
   அவனியிலே அரங்கஞானி கேட்க
   அகத்திய மகரிஷி யானும் இனிதே
2. இனிதே சுபகிருது சால் திங்களில்
   இருபானோர் திகதிமேல் எழுநான்கு திகதிவரை
   இனிநடக்கும் வார நிகழ்வாக
   இந்தியா தமிழக எதிர்கால பலன் குறித்த
3. குறித்த ஆசிதனை உரைப்பேன்
   கொள்கை வழி ஆளுமைகள்
   தெரிவிப்பேன் தனிமனித வரவை
   தேசமெங்கும் மேல்ஏற்றா வண்ணம்
4. வண்ணமுடன் எந்த திட்டங்கள்
   வரையறை செய்தாலும் மாற்றம்
   மண்ணுலகில் நடந்தேறாதப்பா
   மாதனமாந்தர்கள் மாயையுள்
5. உள்ளே ஆளுமை தலைமைகள்
   உழன்று செயல்படா முடங்கினால்
   வல்லமை இழந்து தேசமதும்
   வளர்ச்சி பெருமைகாணா வீழுமப்பா
6. அப்பனே ஏழ்மையை விரட்டிடும்
   ஆக்கப்பூர்வ திட்டம் இல்லா
   ஒப்புக்கு பகட்டான செயல்முறை
   ஊழல்கள் கட்டுக்குள் வாரா செயல்பாடு

7. செயல்பாடு அனைத்தும் வீணப்பா
சேவையை மறந்த நிலைகள்
தயவின்றி கீழும்மேலுமெனத் தொடர்ந்தால்
தரணியில் ருணம்மிகுந்து தேசம்
8. தேசமதும் பொருளாதார வீழ்ச்சி
தானடைந்து உலக அளவில்
நேசம்கொண்ட பிற தேசங்களும்
நிலமதனில் கைவிட நேருமப்பா
9. அப்பனே சிறுகுறுந் தேட்டுக்கும்
அனுமதி அளவிலா பெருகவே
காப்புத் தந்து செயல்பட்டு
கட்டாய வேலைவாய்ப்பை அதிகமாக்கி
10.ஆக்கியே இலகுவாய் சாமானியரும்
அடைய வகைசெய்து அருளவே
தேக்கமின்றி பரதம் தமிழகமும்
தேவைகள் நிறைவுறவளரும் உயரும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் மாசி மாதம் 21ம் நாள் 05.03.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் மாசி மாதம் 28ம் நாள் 12.03.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

கணக்கிலடங்கா யோகிகளும் ஞானிகளும் இப்புனித பூமியில் தோன்றி தவம் செய்தும், தருமங்கள் செய்தும் வெற்றி பெற்றதால் எல்லையில்லா தவபலமும் தருமபலமும் மிக்கதான இந்தியா தமிழகத்தின் எதிர்காலம் குறித்து தானதரும பலம் மிக்க கலியுக ஞானி ஆறுமுக அரங்க மகான் கேட்க அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்திலே சுபகிருது வருடம் மாசி மாதம் 21ம் நாள் 05.03.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் மாசி மாதம் 28ம் நாள் 12.03.2023 ஞாயிற்றுக்கிழமை வரை நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

நாட்டை ஆட்சி புரிவோர் கொள்கைகளை வகுத்து தனிமனித வருவாயை பெருக்கிட வேண்டும். தனிமனித வருவாயை பெருக்காத திட்டங்கள் எதுவானாலும் தேசத்தில் அத்திட்டங்களினால் பெரிய மாற்றங்கள் ஏதும்

நிகழாது. தனி மனித வருவாய்க்கு வாய்ப்பளிக்காமல் பெருநிறுவனங்கள், பெருஞ்செல்வந்தர்கள் என்கிற மாயையுள் ஆட்சியரும், தலைமை பொறுப்பில் உள்ளவர்களும் உட்பட்டு அவர்களை சார்ந்து முடிவு எடுத்தால் அரசின் செயல்பாடுகள் முடக்கமாகும். அரசு தனது வலிமையை இழக்கும் தேசம் வளர்ச்சி அடையாமல் பெருமையான நிலைகளை அடைய முடியாமல் போய் முடக்கமாகும். அரசு வீழ்ச்சி அடையும்.

நாட்டில் உள்ள ஏழ்மையை அகற்றி மக்களை காக்கும் ஆக்கப்பூர்வமான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்த வேண்டும். அதை விடுத்து பார்வைக்கு கவர்ச்சியாகவும் மக்களை ஈர்க்கும் பகட்டான செயல்திட்டங்களால், செயல்பாடுகளினால் ஊழல்கள் பெருகி கட்டுக்கடங்காமல் போய்விடும்.

ஊழலை கட்டுப்படுத்தாமல் செய்யப்படும் செயல்பாடுகள் அனைத்தும் வீணாகி போகுமப்பா. அரசில் அங்கம் வகிக்கும் அதிகாரிகளும், ஆட்சியரும் சேவை மனப்பான்மை மறந்து மக்களிடம் தயவில்லாமல் நடந்து செயல்பாடு கண்டால் நாட்டின் கடன்சுமை அதிகமாகிடும். நாடு பொருளாதார வீழ்ச்சியை சந்திக்கும். நமது நாட்டின் நட்பு நாடுகளும், பிற தேசங்களும் இந்தியாவை கைவிட நேருமப்பா.

ஆகவே நாட்டில் உள்ள சிறுகுறு தொழில்களுக்கு உள்ள சிரமங்களை நீக்கி அவை வளர்ச்சி அடைய பாடுபட வேண்டும் சிறுகுறு தொழில்கள் பெருக பெருக வேலைவாய்ப்புகள் அதிகமாகும். கட்டாய வேலை வாய்ப்பை அதிகப்படுத்தி எல்லோருக்கும் வேலை வாய்ப்பு கிடைத்திட வழிவகை செய்து மக்களுக்கு ஆதரவாய் செயல்பட தடையின்றி பாரதமும் தமிழகமும் விரைந்து முன்னேறும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–